OS: 509/2018

Date: 07.04.2026

பெயர் : சந்திரசேகரன் **(பி.வா.சா.2) ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்**.

<u>**வாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி :–**</u>

1. வழக்கு சொத்து வாதி கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்று கூறி அரசுக்கு கந்தாயம் செலுத்தியதற்கு கந்தாய ரசீது தாக்கல் செய்திருக்கும் நிலையில் அதுகுறித்து எனது விளக்கம் என்னவென்றால் கோவிலின் பெயரில் ரசீது இருக்கிறது. அது கந்தாய ரசீதா அல்லது அது என்ன வகையான ரசீது என்று எனக்கு தெரியவில்லை. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் 4 வது பாராவில் தாவா பி அயிட்ட சொத்தின் தென்புறம் உள்ள நிலத்தினை நான் உண்மையான உரிமையாளர்களிடமிருந்து தகுந்த மறுபயனுக்கு விலைக்கு வாங்கி சுவாதீன அனுபவத்தில் இருந்து வருவதாக சொல்லியிக்கிறேனா என்றால் தாவா சொத்தின் தென்புறம் நான் சொத்தை கிரயம் வாங்கியதால் அவ்வாறு சொல்லியிருக்கிறேன்.

2. பி அயிட்ட சொத்திற்கு தென்புறம் உள்ள நிலத்தை நான் உண்மையான உரிமையாளர்களிடமிருந்து கிரயம் பெற்றதாக சொல்லியிருப்பது தவறுதான என்றால் தாவா சொத்திற்கு வடக்கு பக்கம் 1, 2 பிரதிவாதிகள் சொத்தை வாங்கி அனுபவித்து வருகிறார்கள். தாவா சொத்திற்கு தெற்கு புறம் நான் விலைக்கு வாங்கி அனுபவித்து வருகிறேன். அதை தான் சொல்லியிருக்கிறேன். தாவா பி அயிட்ட சொத்திற்கு தென்புறம் எனக்கு எந்த சொத்தும் இல்லை என்றாலும், நான் எதனையும் அனுபவிக்கவில்லை என்றாலும் சரியல்ல.

3. மோகன்ராஜ், லட்சுமி, பாபு ஆகியோர் ஓ.கே.ஏகாம்பரத்திடம் இருந்து தான் வீட்டு மனைகளை கிரயம் பெற்றார்களா என்றால் பாபு ஓ.கே.ஏகாம்பரத்திடமிருந்து கிரயம் பெற்றது தெரியும். லட்சுமியும், மோகன்ராஜும் யாரிடமிருந்து கிரயம் பெற்றார்கள் என்று எனக்கு தெரியாது. மேற்படியார்களின் வீட்டுமனை நிலங்கள் நான் ஓ.கே.ஏகாம்பரத்திடமிருந்து கிரயம் பெற்ற நிலத்திற்கு கிழபுறமாக உள்ளது என்றால் ஆமாம். என்னுடைய மருத்துவமனை கட்டிடம் தர்மபுரி மெயின் ரோட்டில் இருக்கிறது என்றால் ஆமாம். மருத்துவமனையின் முன்புறம் தர்மபுரி மெயின் ரோடு இருக்கிறது. நான் ஓ.கே.ஏகாம்பரத்திடமிருந்து வாங்கிய வீட்டு மனை நிலத்திற்கு ஒட்டினார் போல் ஒரு ரோடு என்றால் ஆமாம். அது இன்னும் தார் சாலையாக ஆக்கப்படவில்லை. அது தனிப்பட்ட நபர்களின் ரோடு என்று பேசிக்கொள்கிறார்கள்.

4. எனது முதல் விசாரணை வாக்குமூலம் 6 வது பாராவில் சர்வே எண். 81/1N–ல் உள்ள பொது பாதை ஒன்றுதான் எங்களுக்குரிய நிலத்தை அடைவதற்குண்டான ஒரே வழியாகும் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. அந்த பொது பாதை மட்டும் தான் எனது நிலத்தை அடைவதற்கான ஒரே பாதையாகும். என்னுடைய பூமியை நான் 1979ல் கிரயம் பெற்றபோது ஒரே வழிதான் இருந்தது. பின்னர் ஓ.கே.ஏகாம்பரம் சைட் போட்டபோது ஒரு ரோடு போட்டார். அது அரசுக்கு ஒப்படைக்கப்பட்டதா அல்லது அவர் வசமே இருக்கிறதா என்று தனக்கு தெரியவில்லை என்று சாட்சி கூறுகிறார்.

5. எனது பதிலுரையில் என்னுடைய பூமி கார்னர் பூமி என்று சொல்லியிருக்கிறேனா என்றால் நினைவில்லை. ஆனால் அது கார்னர் பிளாட்தான். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தின் 4 வது பக்கத்தில் தாவாவில் வாதிகள் சர்வே எண்.81/1N என்பது காலியிடம் என்று குறிப்பிட்டுள்ளது முற்றிலும் பொய்யானதாகும் என்றும், உண்மையில் அது பொதுமக்களின் பயன்பாட்டிற்கு ஓமலூர் தேர்வுநிலை பேரூராட்சியால் பராமரிக்கப்பட்டுவரும் பொது பாதையாகும் என்று சொல்லியிருக்கும் நிலையில் அதற்கு ஆவணம் ஏதாவது ஒப்படைத்திருக்கிறேனா என்றால் புகைப்படம் ஒப்படைத்திருக்கிறேன். 1934ம் ஆண்டிலிருந்தே ஆவணங்களை ஒப்படைத்திருக்கிறேன். எனது Blue print–லும் பஞ்சாயத்து Lane என்று தான் போடப்பட்டிருக்கிறது.

6. பொது பாதை என்பதற்கு நான் எந்த ஆவணங்களும் ஒப்படைக்கவில்லை என்றாலும், ஒப்படைத்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்து ரோடு என்பதற்கு எந்த ஆவணமும் ஒப்படைக்காமல் வழக்காடி வருவதால் வாதிகள் கோரியவாறு வழக்கு தீர்ப்பாகதக்கது என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை.**</u>

(ஒப்பம்/–த.மாலதி),
சார்பு நீதிபதி,
ஓமலூர்.